1995 ஏப்ரல் 10]

சுற்றுலாத்தலம் அமைத்துக் கொடுத்ததற்கு நன்றி கூறி மேலும் அந்த சுற்றுலாத்தலத்தை அழகுபடுத்தும் எண்ணம் ஏதும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் சித்தன்னவாசலில் ரூ. 8 இலட்சம் செலவில் பூங்கா, சிறுபாலம், உணவு விடுதி மற்றும் ஓய்வு அறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தன்னவாசல் ஓவியங்கள், அஜந்தா, எல்லோரா ஓவியங்களுக்கு இணையான சிறப்புமிக்க ஓவியங்கள் ஆகும். இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் சுற்றுலாத்தலத்தை பார்வையிடுவதற்காக, ஓவியங்களைப் பார்வையிடுவதற்காக வருகிறார்கள். வரலாற்று புகழ்மிக்க அந்த ஓவியங்கள் நல்ல முறையில் தொல்பொருள் பாதுகாப்புத் துறையினால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தப் பகுதியில் ஒரு நீர்வீழ்ச்சி இயக்கியை இயக்கித்தர ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட உலாத்தலத்திற்குரிய அனைத்து அடிப்படை வசதிகளையும் சுற்றுலாத் துறை செய்து கொடுத்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 300. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

300—

கதர்த்துறையின் கூட்டுறவுச் சங்கங்கள்

35518*—டாக்டர் ,எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கதர்த் துறை மூலம் நடத்தப்படும் பருத்தி, பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) இவற்றால் அரசுக்கு ஆண்டு தோறும் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கதர் வாரியத்தின் மூலம் 7 கதர் பருத்தி கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு கதர் பட்டு கூட்டுறவுச் சங்கமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இதன் மூலம் வாரியத்திற்கு எந்தவிதமான வருமானமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது ஆட்சிக் காலத்தில்தான் பல்வேறு ஆட்சிக் காலங்களில் எல்லாம் தூசி படிந்து கிடப்பில் கிடந்த திட்டங்களை இன்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றி வருகின்ற நல்ல சூழ்நிலையை, இன்றையதினம் இந்தியாவிற்கே முன்னோடித் திட்டங்கள் பலவற்றை செய்து வழி நடத்திக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். இன்று பிற்படுத்தப்பட்ட மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில் கதர்த் துறை மூலம் 7 பருத்தி கூட்டுறவுச் சங்கங்களும் ஒரு பட்டு கூட்டுறவுச் சங்கமும் இருந்தாலும் இதன் மூலம் அரசின் பதிவு பெற்று திட்டங்கள் நிறைவேற்றப்படாத சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு என்னென்ன சிறப்புத் திட்டங்களை எடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இருந்தாலும்கூட பம்பாயில் இருக்கக்கூடிய கதர் கிராம ஆணையத்தினுடைய ஒப்புதலை அவர்கள் பெற்றிருந்தால்தான் அந்த கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய அந்த பருத்தி மற்றும் பட்டுகளுக்குரிய தள்ளுபடி போன்ற சலுகைகள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. உங்களுக்குத்தான் தெரியுமே, மாண்புமிகு உறுப்பினர்கள்

1995 ஏப்ரல் 10]

அனைவருக்குமே தெரியுமே, வடக்கே சென்றால் வருவதற்கு எதுவுமே காலதாமதம் ஆகும் என்பது. ஆகவேதான் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணையத்திற்கு நாங்கள் பரிந்துரை செய்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. இன்னும் அவர்களுடைய ஒப்புதல் கிடைக்காமல் இருக்கிறது. அவர்களுடைய ஒப்புதலைப் பெற்ற பிறகு அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் முறையாக செயல்படத் தொடங்கும், அதன் மூலம் வாரியத்திற்கு வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த பருத்தி மற்றும் பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்காக கட்டிடங்கள் கட்டப்பட்டு அவைகள் சரியாக செயல்படாத சூழ்நிலையில் இருக்கின்றன. அவ்வாறு இருக்கின்ற அந்த கூட்டுறவுச் சங்கங்களுடைய கட்டிடங்களை பிற காரியங்களுக்காவது பயன்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து அதைச் செயல்படுத்திக் காட்டுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய ஏழை, எளிய மக்களுக்காக, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட பெண்களுக்காக தாட்கோ நிதி உதவியோடு, அவர்களுடைய உறுதுணையோடு இந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, எந்த ஒரு நோக்கத்தோடு அந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறதோ அந்த நோக்கத்திற்காக அந்த வாரியம் அதைப் பயன்படுத்த வேண்டுமென்று தாட்கோ நிறுவனத்தினுடைய ஒப்புதலைப் பெற்று இருக்கிறோம். ஆகவே, அதை இவ்வாறான திட்டங்களுக்கு பயன்படுத்தவில்லை என்று சொன்னால் அவர்கள் அதை திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்கனவே நாங்கள் ஒப்புதல் தந்து இருக்கிறோம். ஆகவே வேறு திட்டங்களுக்கு அதைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்தில் ஏதாவது அப்படி இருக்குமானால் அவர் அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் அதை தாட்கோவினருடைய ஆலோசனைப்படி வேறு ஒரு திட்டத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.